# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – VI

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 19.11.2015 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- உதவிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (யாழ்ப்பாணம்,வலிகாமம், வடமராட்சி,தீவகம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு,மடு)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு)
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், மன்னார்)
- நிர்வாக உத்தியோகத்தர்கள், மாகாணக் கல்வித் திணைக்களம்.
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.
- இணைப்பாளர், மாகாண உளவள நிலையம்.
- இணைப்பாளர், RIMP.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் இன்று ஆறாவது மாகாணக் கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் கூட்டத்திற்கு வருகைதந்த மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

☞ மாகாண கல்வி அமைச்சின் வேலை இந்த வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்படாது என்றும் அதில் 7 Mn ஐ அவசியமானதும் அவசரமாக செய்து முடிக்கப்படவேண்டிய வேலைக்கு மாற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

☞ தளபாடத் திருத்தத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியினை உரிய முறையில் பயன்படுத்தி தளபாடங்களை திருத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

☞ உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலின் கீழ் மன்னார், வவுனியா தெற்கு, தீவக வலயங்களில் கட்டட வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

☞ 1000 பாடசாலை திட்டத்தின் கீழ் ஆரம்ப பாடசாலைகளாக பிரிந்த பின்னர் தற்காலிக கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகளிற்கு நிரந்தர கட்டடங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

☞ வெற்றிடமாகவுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை(SLEAS), இலங்கை அதிபர் சேவை (SLPS), கல்வி சாரா உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

☞ பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

☞ பல்வேறுபட்ட சமுகங்களிற்கிடையே சமுக ஒருங்கிணைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

☞ மேற்பார்வை தொடர்பான பிரச்சினைகளிற்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்தல்.

☞ பாடசாலை பெயர் மாற்றம் செயலாளரின் அனுமதி இன்றி மாற்றி எழுத முடியாது.

☞ கணிதப் பிரிவொன்றும் LMDU பிரிவொன்றும் விஞ்ஞானப் பிரிவொன்றும் ஆரம்பப் பிரிவொன்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உருவாக்குதல் வேண்டும்.

☞ பாடசாலைகளில் மாணவர்களுக்கு தண்டனை வழங்கல் முறையை இல்லாதெழித்தல்.

☞ ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்களின் அடிப்படை கற்றல் தேர்ச்சிகளை அடைவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

☞ சிறுதிருத்த வேலைகளிற்கான (MRC) 2016 ஆம் ஆண்டிற்குரிய முழு நிதியும் மாகாண கல்வித் திணைக்களத்தில் வைத்தே தேவையான வேலைகளிற்கு வழங்கப்படும்.

☞ கணக்காய்வு ஐயவினா (Audit Queries) தொடர்பில் பயிற்சி சம்பந்தமான விடயங்களில் விடையளிக்கும் போது கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | PSDG வேலைகள் தொடர்பாக | டிசெம்பர் 10 ஆந் திகதிக்குள் PSDG முழு வேலைகளும் செய்து முடிக்கப்பட வேண்டுமெனவும் அதற்கான இறுதிச் சிட்டைகளை கொடுப்பனவுகளிற்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார். இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பொறுப்பாகுவாரென குறிப்பிட்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை வேலைகள் பொறியியலாளர் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் |
| 02. | கௌரவ மாகாணசபை உறுப்பினர்களின் பணத்தில் வாங்கிய பொருட்கள் தொடர்பாக. | வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கௌரவ மாகாணசபை உறுப்பினர்களின் பணத்தில் வாங்கிய பொருட்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கியதான அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதோடு மாகாணக் கல்வி அமைச்சிற்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 03. | CBG நிதி மூலம் செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக. | CBG நிதி மூலம் மாகாணக் கல்வித் திணைக்களம், முன்பள்ளிகளிற்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் செய்யப்பட்ட சில வேலைகளிற்கு எந்தவொரு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படாது காணப்படுகின்றது. இதனை உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கணக்காளர்கள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள். |
| 04. | PSDG இல் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான நிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக. | PSDG இல் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான நிதியில் முன்பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் விரைவில் வேலைகளை பூர்த்தி செய்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. | தொழிநுட்ப உத்தியோகத்தர்கள். |
| 05. | TSEP வேலை தொடர்பாக | TSEP வேலை தொடர்பில் யா/நாவாந்துறை RCTMS, யா/தம்பாட்டி GTMS ஆகியவற்றின் வேலைகள் முடிவடையாது இருப்பதனால் லிங்கம் ஒப்பந்தகாரருக்கு எச்சரிக்கை கடிதம் வழங்குவதுடன் இனிவருங் காலங்களில் கல்வித் துறையில் எதுவித ஒப்பந்தங்களும் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டது. | |
| 06. | அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை | அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்னும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் இரண்டு பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை | |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டு 2000 மாணவர்கள் படிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். | |
| 07. | மனித வள அபிவிருத்தி தொடர்பாக | மனித வள அபிவிருத்தி தொடர்பான தந்திரோபாய பிரேரணைகள் தொடர்பாக பல நோக்கு கற்பித்தல் அணுகுமுறை, கணித விஞ்ஞான ஆசிரியர் பயிற்சி, வெளிநாட்டு பயிற்சி, வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 08. | இணைப் பாடவிதான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் தொடர்பாக | இணைப் பாடவிதான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல். விளையாட்டு, சமுகவியல்தினம், தமிழ்த்தினம், ஆங்கில தினம், கணித விஞ்ஞான தினம் ஆகியவற்றில் மாணவர்கள் பங்குபற்றுவதை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 09. | 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக | 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பப்பிரிவு வேறாக்கப்பட்டதால் இடைநிலை வகுப்பில் பிள்ளைகள் இன்மையால் அப் பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலமை இருப்பதனால் அப் பாடசாலைகளில் மீளவும் ஆரம்பப் பிரிவு ஆரம்பிப்பது பற்றி கருத முடியும். | |
| 10. | 2016 இல் மாகாணத்தின் கல்வித் துறை சார் இலக்குகள் | 2016 இல் மாகாணத்தின் கல்வித் துறை சார் இலக்குகள் தொடர்பாக கருதும் போது ஒவ்வொரு பிரிவிற்கும் இரண்டு முன் மாதிரி ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்குதல், தரம் – 05 புலமைப் பரிசில் பரீட்சையில் எல்லா மாணவர்களையும் 70 புள்ளிகளிற்கு மேல் பெற வைத்தல், க.பொ.த (சா/த) பரீட்சையில் எல்லா மாணவர்களையும் இரண்டு திறமைச் சித்தி © உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைய வைத்தல், க.பொ.த(உ/த) இல் தோற்றும் எல்லா மாணவர்களும் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும் சித்தியடைய வைத்தல். | |
| 11. | விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பாக | உளநலம் பாதிக்கப்பட்ட மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்களை மாணவர் உளநல மகிழ்வகம் (Dropin Centre) இல் அனுமதித்து கல்வி மேம்பாட்டிற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 12. | விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பாக | விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களினுடைய தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல். இதற்கமைய ஒவ்வொரு வலயங்களும் 2016 ஆம் ஆண்டிற்குரிய தங்களுடைய நிகழ்ச்சித் திட்டங்களை (Action Plan) தயாரித்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |

| | | | |
|---|---|---|---|
| 13. | கணித விஞ்ஞான பாடங்களில் மாணவர்களின் முன்னேற்ற நடவடிக்கையை மேம்படுத்தல். | கணித பாடத்தைப் பொறுத்த வரையில் தரம் – 06,07,08 இற்கு வலய மட்டத்தில் கவனிக்கப்பட வேண்டும். தரம் – 09,10,11 இற்கு மாகாண மட்டத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) தரம் 06 தொடக்கம் தரம் – 11 வரையான கணித பாடத்தையும் க.பொ.த(உ/த) இணைந்த கணித பாடத்தையும் ஒருங்கிணைத்து மாணவர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்(விஞ்ஞானம்) தரம் – 06 தொடக்கம் தரம் – 11 வரையான விஞ்ஞான பாடத்தையும் க.பொ.த(உ/த) உயிரியல், இரசாயனப் பாடத்தையும் ஒருங்கிணைத்து மாணவர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (கணிதம், விஞ்ஞானம்) |
| 14. | விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பாக | விசேட தேவையுடைய 40 கண் பார்வை குறைந்த மாணவர்களிற்கு மூக்குக் கண்ணாடி வழங்கியதுடன் 23 கேட்கும் திறன் குறைந்த மாணவர்களிற்கு செவிப்பன்னி இயந்திரங்கள் வழங்கப்பட்டது. விசேட தேவையுடைய மாணவர்களிற்கு உரிய பொருட்களையும் வகுப்பறை உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட கல்வி) |
| 15. | உளநலன் தொடர்பாக | உளநலன் தொடர்பான மாகாண உதவி இணைப்பாளர் 12 வலயங்களிலும் உள்ள 34 தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடப்பட்டதனை அடிப்படையாக கொண்டு கைந்நூல் ஒன்று தயாரிக்கப்பட்டதென தெரிவித்தார். | |
| 16. | மாணவர் உளநல மகிழ்வகம் (Dropin Centre) தொடர்பாக | 50 பாடசாலைகளில் மாணவர் உளநல மகிழ்வகம் (Dropin Centre) அமைக்க நடவடிக்கை எடுத்த போதிலும் 34 பாடசாலைகள் மாணவர் உளநல மகிழ்வகம் நடத்த உடன்பட்டுள்ளன. மாணவ உளநல மகிழ்வகம் உள்ள இடங்களிற்கு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 17. | குடிநீர், மலசல கூட வசதிகள் | வட மாகாணத்திலுள்ள 100 பாடசாலைகளில் 1.9 Mn – 2 Mn ஒதுக்கீட்டின் கீழ் மலசல கூடங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலைகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.<br>தொழிநுட்ப உத்தியோகத்தர்கள். |

| | | | |
|---|---|---|---|
| 18. | கணக்கீட்டு ஐயவினாக்கான விடைகள் தொடர்பில் | யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி தொடர்பாக வந்த கணக்கீட்டு ஐயவினாக்கான விடைகள் விரைவில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். | யாழ்ப்பாண, கிளிநொச்சி – வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் |
| 19. | ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் தொடர்பாக | அதிபர்கள், ஆசிரியர்களின் பதவியுயர்வு காரணமாக வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை தொடர்பாக விபரங்கள் கோரப்பட்ட பொழுது ஆசிரியர்களது சம்பள அதிகரிப்பு (Increment) கான நிலுவையையும் சில வலயங்களினால் சேர்த்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் குறிப்பிட்டார். | |
| 20. | உலக உணவுத் திட்டம் தொடர்பாக | உலக உணவுத் திட்டத்தின் கீழ் செலவுப் பயன் பகுப்பாய்வு (Cost Benefit Analysis) மேற்கொள்வதற்கு மூன்று வாரங்கள் Master Card அமைப்பிலிருந்து மூன்று உத்தியோகத்தர்கள் வந்துள்ளார்கள். மூன்று வாரங்களிற்கு வட மாகாணப் பாடசாலைகளில் உலக உணவுத் திட்டம் அமுல்ப்படுத்துவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுவர். பதிவேடுகளை உரிய முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமென அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தல் வேண்டும். எதிர்கால முதலீட்டிற்கான ஆய்வாக இது இருப்பதனால் மாணவர்களுடைய பரீட்சை ஆற்றுகை தொடர்பான விபரங்களையும் அவர்கள் வரும்பொழுது சமர்ப்பிக்கத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல அதிபர்கள் |
| 21. | ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக | நிர்வாக விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட பொழுது ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக 30.11.2015 இற்குப் பின்னர் வரும் விண்ணப்பப் படிவங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாதென செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களிற்கு தெரிவிக்கப்பட்டது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) |
| 22. | பதவி வெற்றிடங்கள் தொடர்பாக | பதவி வெற்றிடங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட பொழுது 10 சாரதிகளுக்கான வெற்றிடங்களும் 08 அதிவிசேட தர நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான (Supra Grade) வெற்றிடங்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. | |
| 23. | ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பாக | ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பில் ஒரே பாடசாலைகளில் 07 வருடங்களை முடித்த ஆசிரியர்களிற்கு உள்ளக இடமாற்றம் செய்வதுடன் வெளிமாவட்டங்களிற்கு இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்களிற்கு வசதியான போக்குவரத்து வசதியுள்ள பாடசாலைகள் வழங்குவதுடன் அதே | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்) |

| | | | |
|---|---|---|---|
| | | மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை மாவட்டத்தின் போக்குவரத்து வசதி தொலைவிலுள்ள பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்தல் வேண்டும். 28.11.2015 அன்று அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தொடர்பான விபரங்களுடன் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சமுகமளித்து விபரங்களை முன்னளிக்கை (Power Point Presentation) செய்தல் வேண்டும். | |
| 24. | வ/நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் ஆறு ஆசிரியர்கள் திருப்பி அனுப்பப்பட்ட விடயம் தொடர்பாக | வ/நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் ஆறு ஆசிரியர்கள் திருப்பி அனுப்பப்பட்ட விடயம் தொடர்பாக அன்றைய தினத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று பிரச்சினையை தீர்த்து வைத்திருக்க வேண்டுமென செயலாளர் குறிப்பிட்டார். | வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் |
| 25. | பதிலீட்டு ஆசிரியர்கள் தொடர்பில் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் தனது உரையில் பதிலீட்டு ஆசிரியர்களை கஷ்டப்பட்டு வசதிகுறைந்த இடங்களிற்கு அனுப்பினால் அதிபரின் அனுசரணை அங்கு செல்லும் ஆசிரியர்களிற்கு கிடைப்பதில்லையெனவும் எனவே மேலும் மேலும் இந் நிலை ஆசிரியர்களை அனுப்பும் பொழுது ஏற்படாதிருக்க வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவ் விடயத்தில் அதிபர்களிற்கு அறிவுறுத்துமாறு குறிப்பிட்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 26. | நிதி விடயங்கள் தொடர்பாக | நிதி தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட பொழுது பாடசாலை அனுமதியின் போது நிதி சேகரிக்க கூடாதென சுற்றுநிருபங்களில் அறிவுறுத்தப்பட்ட பொழுதும் இது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. மேலும் பாடசாலைகளில் நிகழ்வுகளை நடாத்தும் பொழுது வருடாந்த மேம்பாட்டுத் திட்டத்தில் அதற்குரிய பாதீடு தயாரிக்கப்பட்டு முன்னனுமதி பெற்றிக்க வேண்டும். அவ்வாறு அனுமதி இல்லாது ஏதாவது நிகழ்வுகள் நடத்தப்படுமாயின் அது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது. | |

இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.